# சிறப்பு குடும்ப வன்முறை தடுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயமுத்தூர்.

முன்னிலை- **செல்வி.N.திலகேஸ்வரி, B.Sc., L.L.M.**
சிறப்பு குடும்ப வன்முறை தடுப்பு நீதித்துறை நடுவர்,
கோயமுத்தூர்.

2019 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை

## **DVA No**.163/2019

திருமதி.பிரங்கியா, (வயது 24),
த/பெ.சீனிவாசன் ... மனுதாரர்.

**// எதிர் //**

1. திரு.தீபன் சக்திவேல்,
   த/பெ.சிவசாமி
*2. திரு.சிவசாமி,
   த/பெ.மருதாச்சலம்
*3. திருமதி.நாகமணி,
   க/பெ.சிவசாமி
*4. திரு.ஹரிபிரகாஷ்,
   த/பெ.சிவசாமி ... எதிர் மனுதாரர்கள்

***(மாண்பமை உயர்நீதிமன்றம், சென்னை 2 முதல் 4 எதிர்மனுதாரர்களைப் பொறுத்து வழக்கை Crl.O.P. No.23638/18-ல் நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது)**

இந்த வழக்கானது 23.11.2016 ம் தேதி DVA No.57/2016 என குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.6, கோவை நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, 28.08.2019 ம் தேதி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 29.08.2019 ம் தேதி DVA No.163/2019 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, 30.09.2019 ம் தேதியன்று என் முன் இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சந்திரன் மற்றும் திருமதி.A.P.திவ்யா அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருமதி.M.சாவித்திரி மற்றும் திரு.R.அம்பிகாவதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து, இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு

**உத்தரவு**

இம் மனுவானது மனுதாரரால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் **சட்டப் பிரிவு 10,12,19 VIII, 20 மற்றும் 22-ன் கீழ்** பரிகாரங்கள்

வேண்டி 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் பாரத் மேட்ரிமோனியில் விளம்பரம் கொடுத்து பெற்றோர்களின் சம்மதத்துடன் திருமணத்திற்கு சம்மதிக்கப்பட்டு, கடந்த 06.07.2016ம் தேதி கோவை, ஈச்சனாரி லட்சுமி கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றும், மனுதாரருக்கு வரதட்சணையாக 50 பவுன் தங்க நகைகளும், 1ம் எதிர்மனுதாரருக்கு 5 பவுனில் ஒரு பிரேஸ்லெட்டும், 2 பவுனில் மோதிரமும், 3 பவுனில் தங்க செயின் அணிவித்தும், ரூ.5,00,000/- மதிப்புள்ள வீட்டு உபயோகப் பொருட்களும், திருமணத்திற்கும், வரவேற்புக்கும் சேர்த்து ரூ.11,00,000/- வரையில் மனுதாரரின் வீட்டாரின் தரப்பில் செலவு செய்து திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு 07.07.2016ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் இரவு 11.00 மணியளவில் முதலிரவு அறைக்கு வந்த மனுதாரர் அதிர்ச்சியடைந்தார் என்றும், அங்கு 1ம் எதிர்மனுதாரர் இல்லை என்றும், பின்னர் குளியலறையில் இருந்து வெளியே வந்த 1ம் எதிர்மனுதாரர் "எனக்கு பயமாக இருக்கு, நான் செத்துபோற அளவுக்கு ஹார்ட் பீட் அடிக்குது. நான் தனியாவே படுத்துக் கொள்கிறேன்" என்று கூறியதாகவும், மனுதாரர் இதனால் மனம் நொந்து போனார் என்றும், அடுத்தநாள் 08.07.2016ம் தேதியன்று நடந்த விவரங்களை மனுதாரர் அவரது தாயாரிடம் கூறவே, அவர் அறிவுரை கூறியதன் அடிப்படையில் அப்படியே விட்டு விட்டார் என்றும், இந்நிலையில் 11.07.2016ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரரிடம் மனுதாரர் இப்படியே எவ்வளவு நாள் இருப்பது என்று கேட்டதற்கு தனது தகப்பனாரின் வற்புறுத்தலின் பேரில் தான் தான் திருமணம் செய்து கொண்டதாகக் கூறினார் என்றும், மறுநாள் 12.07.2016ம் தேதியன்று இரவு 1ம் எதிர்மனுதாரர் "தனக்கு ஆண்மை குறைவு நோய் உள்ளது என்றும், கடந்த 2015ம் வருடத்தில் ஏற்கனவே தீபா என்ற பெண்ணைத் தனக்குப் பார்த்து திருமணம் வரை சென்று அந்த திருமணம் நின்றுவிட்டது என்றும், காரணம் அந்த பெண்ணிடம் தான் உண்மையை கூறியதால் திருமணம் நின்று போனது என்றும், அதனால் உண்மையை

மனுதாரரிடம் கூறவில்லை என்று சொல்லிக்கொண்டே 1ம் எதிர்மனுதாரர் அவரது தலையை சுவற்றில் பலமுறை இடித்துக்கொண்டே அழுதார் என்றும், அடுத்தநாள் 13.07.2016ம் தேதியன்று காலை எழுந்தவுடனே 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களிடம் மனுதாரர் இது பற்றி கூறிய போது அனுசரிச்சுபோகும் படியும், 1ம் எதிர்மனுதாரரின் உடல் குறைபாட்டை பெரிது படுத்த வேண்டாம் என்றும், பெரிய பெரிய அரசியல் வாதிகளையும், அதிகாரிகளையும் தங்களுக்குத் தெரியும் என்றும் ஒழுங்காக இரு என்று கூறி மிரட்டியதாகவும், அன்று இரவு 1ம் எதிர்மனுதாரர் "பொறுமையாக இரு, நாம் சென்னை போகும் போது நல்ல டாக்டராக பார்த்து கண்சல்ட் பண்ணலாம்" என்று சொல்லிவிட்டு தூங்கிவிட்டார் என்றும், பின்னர் 18.07.2016ம் தேதியன்று சென்னைக்கு மனுதாரரை அழைத்துச் சென்ற 1ம் எதிர்மனுதாரர் 21.07.2016 அன்று அமெரிக்கா செல்ல கிளம்ப வேண்டும் என்று கூறியதாகவும், அதற்கு மனுதாரர் டாக்டரை பார்த்துவிட்டு தான் கிளம்ப வேண்டும் என்று கூறியதால் ஆத்திரமடைந்த 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை காலில் போட்டிருந்த ஷீவை கழற்றி சரமாரியாக அடித்துள்ளார் என்றும், பின்னர் தான் சாகப்போகிறேன் என்று சொல்லி அந்த அறையில் இருந்த கத்தியை எடுத்து 10 முறைக்கும் மேல் அவரது கையைக் குத்திக் கொண்டுள்ளார் என்றும், மனுதாரர் உதவி கேட்டு அறையை திறந்து வெளியில் செல்லமுற்பட்டபோது இழுத்து கீழே தள்ளி விட்டுள்ளார் என்றும், பின்னர் அன்றே 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை விட்டுவிட்டு அமெரிக்கா சென்றுவிட்டார் என்றும், அடுத்த நாள் கோவைக்கு வந்து எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு மனுதாரர் சென்றபோது, 2ம் எதிர்மனுதாரர் வாய்க்கு வந்தபடி கெட்டவார்த்தைகளால் பேசி, அவமானப்படுத்தியும், கழுத்தை பிடித்து காருக்குள் தள்ளிக்கொண்டு வந்து மனுதாரரின் பெற்றோர் வீட்டில் விட்டுட்டு சென்றுவிட்டார்கள் என்றும், இதுவரை மனுதாரருடன், 1ம் எதிர்மனுதாரர் பேசாமலும், ஈமெயில், வாட்ஸ்ஆப், பேஸ்புக் ஆகியவற்றின் மூலமாக செய்தி அனுப்பியும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் பேச மறுத்து வருகிறார் என்றும், இது முழுக்க முழுக்க 2ம் எதிர்மனுதாரரின் வரட்டு கௌரவத்தால் மனுதாரரின் வாழ்க்கையை பாழ்படுத்திவிட்டார்கள் என்றும், மனுதாரரின் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது என்றும், மனுதாரர் அவரது

வாழ்க்கையை எண்ணி தினம் தினம் மனம் நொந்து வாழ்கிறார் என்றும், 1ம் எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் சேர்ந்து 1ம் எதிர்மனுதாரருக்கு இருக்கும் நோய்களை மறைத்தும், பாரத் மேட்ரிமோனியில் இன்னபிற விவரங்களை மோசடியாக பதிவிட்டு, ஏமாற்றியும், நம்பிக்கை மோசடி செய்தும், மேற்படி திருமணத்தை நடத்தியுள்ளார்கள் என்றும், எனவே இந்நீதிமன்றம் பிரிவு 18(D)-ன் கீழ்

(அ) எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மிரட்டல் விடுவதை தடுத்தும் மற்றும் எதிர்மனுதாரர்கள் மனுதாரர் மீது இன்னபிற குடும்ப வன்முறைகள் பிரயோகிக்காமல் இருக்க உத்தரவிடும்படியும்,

(ஆ) மேலும் எதிர்மனுதாரர்கள் வசம்உள்ள மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு கொடுத்த 60 பவுன் தங்கநகைகள் மற்றும் ரூ.5,00,000/- மதிப்புள்ள வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் திருமணத்திற்கு மனுதாரரின் பெற்றோர்கள் செய்த செலவுத் தொகை ரூ.11,00,000/- ஆகியவற்றை 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர் வசம் ஒப்படைக்கும்படியும்,

(இ) பிரிவு 22ன் கீழ் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு ஏற்படுத்திய இழப்பீற்கும், மனஉளைச்சலுக்கும், கொடுமைகளுக்கும் இழப்பீடாக ரூ.1 கோடி வழங்க உத்தரவிடும்படியும்,

(ஈ) மேலும் மாண்பமை நீதிமன்றம் தக்கதென கருதும் இன்னபிற பரிகாரங்களை வழங்க உத்தரவிட வேண்டியும், மனுதாரருக்கு நல்லதொரு தீர்மானம் கிடைக்க வேண்டும் என்றும் மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

3. **Crl.O.P. No**. 23638/2018 தேதி 26.03.2019, மாண்பமை உயர் நீதிமன்றம் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிரான வழக்கை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.

**4. <u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:**

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்து சம்பவங்கள் மற்றும் உண்மையின்படி நிலைக்கத்தக்கதல்ல, எதிர்மனுதாரரும், மனுதாரருக்கும் பாரத்

மேட்ரிமோனியில் விளம்பரம் கொடுத்து பெற்றோர்களின் சம்மதத்துடன் திருமணத்திற்கு சம்மதிக்கப்பட்டு, கடந்த 06.07.2016 ம் தேதி கோவை, ஈச்சனாரி லட்சுமி கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது உண்மை என்றும், மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் வரதட்சணையாக 50 பவுன் தங்க நகைகளும், 1 ம் எதிர்மனுதாரருக்கு 5 பவுனில் ஒரு பிரேஸ்லெட்டும், 2 பவுனில் மோதிரமும், 3 பவுனில் தங்க செயின் அணிவித்தும், ரூ.5,00,000/- மதிப்புள்ள வீட்டு உபயோகப் பொருட்களும், திருமணத்திற்கும், வரவேற்புக்கும் சேர்த்து ரூ.11,00,000/- வரையில் மனுதாரரின் வீட்டாரின் தரப்பில் செலவு செய்து திருமணம் சீரும்சிறப்புமாக நடைபெற்றதை தான் மறுப்பதாகவும், எதிர்மனுதாரர் வரதட்சணை எதுவும் மனுதாரரிடம் எதிர்பார்க்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் அமெரிக்காவில் இருந்தபோது நவம்பர் மாதம் நிச்சயதார்த்தத்திற்கு நேரில் வரச்சொல்லி இரு வீட்டாரும் எதிர்மனுதாரரிடம் கூறினார்கள் என்றும், அந்த சமயத்தில் மனுதாரர் பெங்களூரில் Lotus conversation center-ல் பணிபுரிந்து வந்தார் என்றும், மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க விலையுயர்ந்த ஆடை, ஐபோனும் வாங்கி சென்னைக்கு வந்தவுடன் தன்னை நேரில் சந்தித்தபோது கொடுத்ததாகவும், Mock engagement 18.11.2015 தேதியன்று மனுதாரர் தகப்பனார் சொன்னதன் பேரில் இரண்டு தங்க மோதிரங்கள் ஒன்று மனுதாரருக்கும், மற்றொன்று 1 ம் எதிர்மனுதாரருக்கும், அதே சமயத்தில் மனுதாருக்கு பியூட்டி பார்லருக்கு சென்ற செலவுகளை 1 ம் எதிர்மனுதாரர் தான் செய்துள்ளார் என்றும், கோவையில் சாய்பாபா காலனியில் 22.11.2015 நிச்சயதார்த்தம் நடந்தது என்றும், அப்போது எதிர்மனுதாரர் பச்சைக்கல் தங்க மோதிரம் மனுதாரருக்கு கொடுத்துள்ளார் என்றும், திருமணத்திற்குரிய செலவு ரூ.8,50,000/-ஐ இருவீட்டாரும் சரிசமமாக செய்துள்ளதாகவும், திருமணத்திற்கு பொருட்களை வாங்குவதற்காக இரு வீட்டு பெற்றோர்களும் 18.04.2016 ம் தேதியன்று கொச்சின் சென்றபோது அந்த செலவு முழுவதையும் 1 ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் செய்தார் என்றும், திருமணத்திற்கு பிறகு 1 ம் எதிர்மனுதாரரும், மனுதாரரும் அமெரிக்கா செல்வதற்கு விசா மற்றும் அனைத்து ஏற்பாடுகளையும் எதிர்மனுதாரர் செலவில் செய்துள்ளார் என்றும், திருமணத்தை பதிவு செய்ய 6 ந் தேதி பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார்கள்

என்றும், 10 ந் தேதி தாலி பிரித்து கோர்க்கும் நிகழ்ச்சி நடந்தது என்றும், 11 ந் தேதி மனுதாரருக்கு விசா நேர்காணல் இருந்ததால் ஆவணங்களுடன் 10 ந் தேதி 1 ம் எதிர்மனுதாரரும், மனுதாரரும் சென்னைக்கு சென்று, 11 ந் தேதி நேர்காணலை முடித்துவிட்டு விமானம் மூலம் கோவைக்கு வந்ததாகவும், 19 ந் தேதி 2 வது நேர்காணலுக்காக நேரில் மனுதாரரை அழைத்துச் சென்று, 2 நாட்கள் சென்னையில் ஓட்டலில் மனுதாரருடன் தங்கியிருந்ததாகவும், அப்போது தாலி கோர்ப்பதற்கு தங்கமும், மனுதாரரின் சகோதரிக்கு தங்க கம்மல் ஒன்றும், அவருடைய தாயாருக்கு பட்டுபுடவை 1 ம் எதிர்மனுதாரர் வாங்கியுள்ளார் என்றும், மனுதாரருக்கு பாஸ்போர்ட் கிடைக்காததால் மனுதாரரை 1 ம் எதிர்மனுதாரர் அவருடன் அழைத்து செல்ல முடியவில்லை என்றும், பாஸ்போர்ட் 22 ந் தேதி தான் மனுதாரர் விசா அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொண்டார் என்றும், 22.07.2016 Returns Ticket அனைவருக்கும் 1 ம் எதிர்மனுதாரரே புக் செய்திருந்ததாகவும், 22 ந் தேதி மனுதாரரின் அப்பா 25 ந் தேதி கோவையில் இருந்து சென்னைக்கு வருவோம் என்று வாட்ஸ் அப்பில் சொல்லியிருந்ததால் ரயில் டிக்கெட் 1 ம் எதிர்மனுதாரர் தான் புக் செய்திருந்தார் என்றும், ஆனால் அன்று மனுதாரர் சென்னைக்கு வரவில்லை என்றும், அமெரிக்காவிற்கு வரவில்லை என்று சொன்னார் என்றும், 26.07.2016 தேதியன்று 1 ம் எதிர்மனுதாரரால் வாங்கப்பட்ட விமான டிக்கெட்டை மனுதாரர் நீக்குறவு செய்துவிட்டார் என்றும், 21.07.2016 அன்று அமெரிக்கா செல்லும்போது மனுதாரரின் ஒரு பெட்டியையும், வெள்ளி பொருட்களையும், 10 ஜோடி செருப்புகளையும், துணிமணிகளையும் எடுத்துச் சென்றுள்ளார் என்றும், 1 ம் எதிர்மனுதாரர் மணவாழ்க்கைக்குத் தகுதியானவர் இல்லை என்றும், எதிர்மனுதாரர் ஆண்மைக்குறைவு நோய் இருப்பதாகவும் கூறி மனுதாரர் HMOP வழக்கினை தாக்கல் செய்து exparte order பெற்றுவிட்டு 1 ம் எதிர்மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 மற்றும் ம.சா.2 மட்டும்

விசாரிக்கப்பட்டுள்ளனர். மனுதாரர் தரப்பில் சாண்றாவணம் ம.சா.1ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2-ன் மூலம் சா.த.சா.ஆ.1 முதல் சா.த.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் தீபன் சக்திவேல் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.35 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எ.ம.சா.1 ன் மூலம் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**தீர்வு:-**

7. மனுதாரர் தனது மனுவில் பாரத் மேட்ரிமோனியல் மூலமாக தனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் பெற்றோர்கள் பார்த்து 06.07.2016 கோவை ஈச்சனாரி லட்சுமி கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றும், 07.07.2016ம் தேதியன்று தான் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் முதலிரவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். இதனை 1 ம் எதிர்மனுதாரரும் தனது எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ளார்.எனவே இரு தரப்பினருக்கிடையே மேற்கூறிய சங்கதிகளைப் பொறுத்து முடிவு செய்ய வேண்டிய பிரச்சனை எதுவும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் தன்னுடைய மனுவில் 07.07.2016, 09.07.2016, 11.07.2016ம் தேதியன்றும் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் தாம்பத்ய உறவு ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றும், 12.07.2016ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் தனக்கு ஆண்மைக் குறைவு நோய் உள்ளது என்று கூறி ஏற்கனவே தீபா என்ற பெண்ணுடன் நிச்சயம் ஆகி இதன் காரணமாக நின்று விட்டது என்று கூறி அழுது கொண்டே தலையை சுவற்றில் பலமுறை இடித்துக் கொண்டதாகவும் கூறியுள்ளார். மேற்கூறிய சங்கதியினை 1ம் எதிர்மனுதாரர் தனது

எதிருரையில் மறுத்து தனக்கு ஆண்மை குறைபாடு நோய் இல்லை என்றும், தான் இது சம்மந்தமாக மருத்துவப் பரிசோதனைக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளத் தான் தயாராக உள்ளதாகவும், மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும், தனக்கும் மனுதாரருக்கும் தாம்பத்ய உறவு ஏற்பட்டு அதனால் மனுதாரர் கர்ப்பமானதாகவும் கூறியுள்ளார். மனுதாரர் தனது தரப்பில் தன்னையும், 1ம் எதிர்மனுதாரரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், 1ம் எதிர்மனுதாரர் ஆண்மைக் குறைவு நோய் உள்ளவர் என்பதை நிரூபிக்க வேறு ஆவண சாட்சியமோ, வாய்மொழி சாட்சியமோ எதையும் முன்வைக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் தனது தரப்பில் மின்னணு சாட்சியங்களாக ஆவணங்களையும், சான்றுப்பொருட்களாக சா.பொ.1 மற்றும் 2 ஐயும் சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மின்னணு மூலம் பெறப்பட்டுள்ள சான்றாவணங்கள் போலியாக உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தனது தரப்பில் சாட்சிய சட்டப் பிரிவு 65 பி-ன் கீழ் சான்றிதழ் சமர்ப்பித்து தனது தரப்பில் சாட்சியங்களை சமர்ப்பித்துள்ளார். இந்நிலையில் அவை போலியாக உருவாக்கப்பட்டது என்பதை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்நீதிமன்றம் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்ட ஆட்சேபணையை நிராகரித்து எ.ம.சா. ஆ 10 ஐ ஏற்றுக்கொள்கிறது. எ.ம.சா.ஆ.10 ஐப் பரிசீலனை செய்ததில் மனுதாரர் செல்போனிலிருந்து 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட வாட்ஸ் அப் மெசேஜில் தான் தனியாகவே கருக்கலைப்பு செய்து கொண்டதாகவும், அதனை 1ம் எதிர்மனுதாரருக்காக அவரை மற்றவர்கள் தவறாக நினைத்து விடக் கூடாது என்பதற்காக மற்றவர்களிடமிருந்து அதை மறைத்து விட்டதாகவும், கருக்கலைப்பு செய்ததால் தனக்கு மிகுந்த உடல் வலி ஏற்பட்டதாகவும், 02.09.2016 தேதியன்று 1ம் எதிர்மனுதாரருக்கு வாட்ஸ் அப்பில் செய்தி அனுப்பியுள்ளார் என்பதற்கான பிரிண்ட் அவுட்டை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், எ.ம.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 07.07.2016, 09.07.2016, 10.07.2016 14.07.2016, 15.07.2016, 17.07.2016 தேதியிட்ட புகைப்படங்களைக்

கொண்டும் பார்க்கும் போது திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரருக்குமிடையே தாம்பத்ய உறவு சம்மந்தப்பட்டதான பிரச்சனை இருப்பதாக எதுவும் தெரியவரவில்லை என்றும், இருவரும் மிகவும் அன்யோன்யமாகவும், நெருக்கமாகவும் இருந்துள்ளது தெரியவருவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் மனுதாரருக்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் இடையே தாம்பத்ய உறவு ஏற்படவில்லை என்பதையும், தான் கர்ப்பம் தரிக்கவில்லை என்பதையும் நிரூபிக்கும் விதமாக மருத்துவ ரீதியான ஆவணங்கள் எதையும் மனுதாரர் தனது தரப்பில் சமர்ப்பிக்கவில்லை. ம.சா. 1 தன்னுடைய முதல் விசாரணையில் 08.07.2016 ம் தேதியன்று 07.07.2016 ம் தேதியன்று இரவு நடந்த விபரங்களை தன் கணவரின் தாயாரிடம் சொன்னதாகவும், அவர் அதற்கு அறிவுரை சொன்னதாகவும், தானும் அதன்பிறகு அப்படியே விட்டு விட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் ம.சா. 2 தன்னுடைய முதல் விசாரணையில் 08.07.2016 ம் தேதி தன் மகளை தன் மனைவி கேட்ட போது 1 ம் எதிர்மனுதாரர் சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதாக தன் மகள் தன் மனைவியிடம் சொன்னதாக தன் மனைவி தன்னிடம் கூறினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர் தன்னுடைய அசல் மனுவிலோ, தன் முதல் விசாரணையிலோ 07.07.2016 இரவு நடந்த விபரங்களை மறுநாள் தன் தாயாரிடம் கூறியதாக எதுவும் கூறவில்லை. தனது மாமியாரிடம் மட்டுமே அது பற்றி கூறியதாக மனுதாரர் கூறியுள்ள நிலையில் ம.சா.2 ன் சாட்சியம் ம.சா.1 ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. இதனால் மனுதாரரின் வழக்கின் மீது சந்தேகமே எழுகிறது. 1 ம் எதிர்மனுதாரர் ஆண்மைக் குறைபாடு நோயுள்ளவர் என்பதையும், இதனால் மனுதாரர் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்பதையும் மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மனுதாரர் தனது மனுவில் சென்னையில் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து 21.07.2016 ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரர் தன்னை காலில் போட்டிருந்த ஷூவை எடுத்து சரமாரியாக அடித்ததாகவும், பின்னர் தான் சாகப்போவதாகவும் கூறி அறையில் இருந்த கத்தியை எடுத்து 10 முறைக்கும் மேல் அவரின் கையைக் குத்திக் கொண்டுள்ளார் என்றும், மனுதாரர் உதவி கேட்டு அறையைத் திறந்து

வெளியே செல்ல முற்பட்ட போது இழுத்து கீழே தள்ளி விட்டுள்ளார் என்றும் கூறியுள்ளார். ஆனால் 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையில் இந்த சங்கதிகளை மறுத்துள்ளார். ம.சா. 1 தன்னுடைய முதல் விசாரணையில் "21 ம் தேதி அமெரிக்கா போவதாக என்னிடம் சொன்னார். நான் மருத்துவரிடம் செல்ல வேண்டும் என்று கூறினேன். அதற்கு கோவப்பட்டு ஷுவைக் கழட்டி என்னை பல இடங்களில் அடித்தார். கத்தியை எடுத்து கையில் 10 முறை குத்திக்கொண்டு சாகிறேன் என்று கத்தினார். நான் அறையில் இருந்து வெளியே வந்து யாரையாவது அழைக்கலாம் என்று நினைத்த போது கோவப்பட்டு என்னைத் தள்ளி விட்டார். அன்று இரவே 1ம் எதிர்மனுதாரர் அமெரிக்கா சென்று விட்டார் " என்று சாட்சியம் அளித்துள்ளார். ம.சா. 2 தனது முதல் விசாரணையில் "18ம் தேதி விசாவிற்கு நேர்காணலுக்காக மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் சென்னைக்கு சென்றார்கள். அந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் மருத்துவரிடம் சென்று பார்க்கலாம் என்று சொல்லி தான் மனுதாரரை அழைத்து சென்றதாக மனுதாரர் என்னிடம் கூறினார். சென்னையில் மருத்துவரைப் பார்க்க மனுதாரர் அழைத்ததற்கு 1ம் எதிர்மனுதாரர் அடித்து மனுதாரரைத் தள்ளிவிட்டதாக மனுதாரர் அடுத்த நாள் என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார். 21ந் தேதி காலை 1ம் எதிர்மனுதாரர் விமானம் மூலம் அமெரிக்கா சென்று விட்டார்" என்று சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் 21.07.2016ந் தேதியன்று காலையிலேயே 1ம் எதிர்மனுதாரர் அமெரிக்காவிற்கு சென்று விட்டதாகவும், அதற்கு முந்தைய நாளில் தான் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை ஷுவால் அடித்துள்ளதாகவும் ம.சா. 2 சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது. ஆனால் ம.சா. 1. 21.07.2016ம் தேதியன்று இரவு தான் 1ம் எதிர்மனுதாரர் அமெரிக்காவிற்கு சென்றதாகவும், அன்றைய தினம் தான் அவர் ஹோட்டலில் வைத்து தன்னை ஷுவால் அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இதன் மூலம் மசா. 1 மற்றும் 2 சாட்சிகள் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை ஷுவால் அடித்தது சம்மந்தமாக முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது தெரிய வருகிறது.

9. மேலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா. ஆ.19-னை பரிசீலனை செய்த போது 22.07.2016ம் தேதியன்று 1ம்

எதிர்மனுதாரருக்கும் ம.சா. 2 ற்கும் இடையே சுமூகமான வாட்ஸ் அப் உரையாடல் நடந்துள்ளது என்பதும், மனுதாரர் தனது பாஸ்போர்ட்டை அன்றைய தினம் பெற்றுக் கொள்வாரா என்று 1 ம் எதிர்மனுதாரர் ம.சா 2-டம் கேட்டுள்ளார் என்றும், அதற்கு ம.சா. 2 ம் ஆமாம் என்று பதில் சொல்லியுள்ளதும் தெரியவருகிறது. ஆனால் ம.சா.2, தனது குறுக்கு விசாரணையில் 21 ந் தேதி வரை 1 ம் எதிர்மனுதாரருடன் தானும் மனுதாரரும் நல்ல உறவுடன் தான் இருந்தோம் என்ற சங்கதியை தவறு என்ற கூறி மறுத்துள்ளார். மேலும் தான் 1 ம் எதிர்மனுதாரர் அமெரிக்கா சென்ற போது சென்னைக்கு செல்லவேயில்லை என்றும் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். எ.ம.சா. ஆ, 19 ன் மூலம் 22.07.2016,09.08.2016 ஆகிய தேதிகளிலும் ம.சா. 2 ம் 1 ம் எதிர்மனுதாரரும் வாட்ஸ் அப் மெசேஜில் சுமூகமாகப் பேசிக் கொண்டு இருந்துள்ளனர் என்பதும், 20.07.2016 ம் தேதியன்று ம.சா. 2 மற்றும் அவரது மனைவி, அவரது இளைய மகள் மற்றும் 1 ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் ஆகியோரும் கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு இரயில் மூலம் சென்றுள்ளதும், மீண்டும் 22.07.2016 ம் தேதியன்று சென்னையிலிருந்து கோயமுத்தூருக்கு இரயில் மூலம் திரும்ப வந்துள்ளார்கள் என்பதும், எ.ம.சா.ஆ.27 ன் மூலம் தெரியவருகிறது. மேலும் இதற்கான பயணச்சீட்டையும் 1 ம் எதிர்மனுதாரர் தான் வாங்கியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேற்கூறிய ஆவண சாட்சிகளைக் கொண்டு பார்க்கும் போது ம.சா 2 ன் சாட்சியத்தின் மீது சந்தேகமே எழுகிறது.

10. 1 ம் எதிர்மனுதாரர் தன் குறுக்கு விசாரணையில் "20.07.2016 தேதியன்று சென்னை ஹோட்டலில் மனுதாரரைக் கீழே தள்ளி உதைத்து ஷூவால் கன்னத்திலும் முகத்திலும் மாறி மாறி அடித்தேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் நானும் மனுதாரரும் வெளியில் சென்று பொருட்களை வாங்கினோம். வெளியில் சென்று பொருட்கள் வாங்கியதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் ஹோட்டலில் உள்ள கத்தியை எடுத்து என் கையில் 10 முறை குத்திக் கொண்டேன் என்றால் பொய்" என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் தன் முதல் விசாரணையில் " 21 ந் தேதி தன்னை வழி அனுப்புவதற்கு தன் பெற்றோரும், மனுதாரரின் பெற்றோரும், மனுதாரரின் தங்கையும் வந்தார்கள் என்றும் அனைத்து செலவுகளையும் தான் தான் செய்தேன் என்றும், டி நகருக்கு

சென்று மனுதாரருக்கு தாலி கோர்ப்பதற்கு தங்கம் தன் செலவில் வாங்கியதாகவும், மனுதாரரின் தங்கைக்கு தங்கக் கம்மலும், அவரின் தாயாருக்கு பட்டுப்புடவையும் வாங்கிக் கொடுத்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். எ.த.சா. ஆ.24 ன் மூலம் மேற்கூறிய பொருட்கள் எ.ம.சா. 1-ன் கிரெடிட் கார்டின் மூலம் வாங்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. இதன் மூலம் மனுதாரரின் பெற்றோர்கள் 1ம் எதிர்மனுதாரர் வெளிநாடு சென்ற சமயத்தில் அவரை வழியனுப்ப சென்னைக்கு சென்றுள்ளனர் என்பது மேலும் நிரூபணமாகிறது.

11. 1ம் எதிர்மனுதாரர் தன் எதிருரையில் தன்னுடைய கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி மனுதாரர் பொருட்கள் வாங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். எ.ம.சா. ஆ. 10ல் 08.08.2016ம் தேதியன்று வாட்ஸ் அப் மெசேஜின் மூலமாக மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடம் தனக்கு பணம் வேண்டும் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் கிரெடிட் கார்டை தான் பயன்படுத்திக் கொள்ள அனுமதி கேட்டு அதற்கு 1ம் எதிர்மனுதாரரும் அனுமதி கொடுத்துள்ளார் என்பதும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ. 24, 25, 28 ஆவணங்களின் மூலம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் கிரெடிட் கார்டை 21.07.2016 தேதிக்குப் பின்னிட்டும் கூடப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. இந்நிலையில் மனுதாரர் தன் மனுவில் 21.07.2016 தேதிக்கு பின்னிட்டு தான் பலமுறை இமெயில் வாட்ஸ்அப், பேஸ்புக் ஆகியவற்றின் மூலமாக செய்தி அனுப்பியும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் பேச மறுத்துள்ளதாக எவ்வாறு கூறியுள்ளார் என்ற கேள்வி எழுகிறது. உண்மையிலேயே 21.07.2016 ம் தேதியன்று எதிர்மனுதாரர் மனுதாரரை ஷுவால் அடித்து கொடுமைப்படுத்தி இருந்தால் எவ்வாறு அதற்கு பின்னிட்டும் மனுதாரர் மற்றும் மனுதாரரின் தகப்பனார் ஆகிய இருவரும் 1ம் எதிர்மனுதாரருடன் சுமூகமான முறையில் வாட்ஸ்அப்பில் உரையாடியுள்ளனர் என்ற சந்தேகம் எழுகிறது.

12. மேலும் உண்மையிலேயே 1ம் எதிர்மனுதாரர் தனக்கிருந்த உடல் குறைபாட்டை மறைத்து ஏமாற்றி மனுதாரரைத் திருமணம் செய்திருந்தாலோ 21.07.2016ம் தேதியன்று மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் ஷுவால் அடித்து கொடுமைப்படுத்தியிருந்தாலோ அது பற்றி உடனடியாக மனுதாரர் தரப்பு

சட்டப்படியான நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்ற ஐயம் எழுகிறது. மேலும், 10.09.2016 ம் தேதியன்று தான் மனுதாரர் தரப்பில் 1 ம் எதிர்மனுதாரர் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சங்கதிகள் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களைக் கொண்டு பார்க்கும் போது மனுதாரர் மனுவில் கூறப்பட்டுள்ள வன்கொடுமை எதுவும் நடந்ததாக மனுதாரர் தரப்பில் சரிவர நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. குடும்ப வன்கொடுமை எதுவும் நடந்ததாக மனுதாரர் தரப்பில் போதிய ஆவணம் மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் மூலம் நிரூபணம் செய்யாத நிலையில் மனுதாரர் தரப்பில் திருமண செலவு செய்தது சம்மந்தமாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலிக்க வேண்டிய அவசியமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் தன்னுடைய தரப்பு வழக்கை சரிவர நிரூபணம் செய்யாத காரணத்தால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று கருதி மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்குக் கிடைக்கக்கூடியதல்ல எனக் கருதி இம்மனுவைத் தள்ளுபடி செய்ய முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்நீதிமன்றம் இம்மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.,

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2019 ம் வருடம் அக்டோபர் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமையன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
சிறப்பு குடும்ப வன்முறை
தடுப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1. திருமதி.பிரங்கியா

ம.சா.2 திரு.சீனிவாசன்

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**</u>

**ம.சா.ஆ.1** திருமண பதிவு சான்றிதழ் ஒளி நகல்

**ம.சா.ஆ.2** திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்

**ம.சா.ஆ.3** திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் -2

**ம.சா.ஆ.4** திருமணத்தின்போது ஏற்பட்ட செலவுக்கான 14 பில்கள்

**ம.சா.ஆ.5** நகை வாங்கியதற்கான ரசீதுகள்

**ம.சா.ஆ.6** கோவை குடும்ப நல நீதிமன்ற **HMOP No**.1115/2016 ஏற்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்

**ம.சா.ஆ.7** 13.10.2016 ம் தேதியன்று காவல் ஆணையரிடம் மனுதாரர் கொடுத்த புகாரின் ஒளி நகல்

**ம.சா.ஆ.8** 13.10.2016 ம் தேதியன்று கோவை மாவட்ட பாதுகாப்பு அதிகாரியிடம் கொடுத்த புகார் மனுவின் ஒளி நகல்

**ம.சா.ஆ.9** 21.09.2016 ம் தேதி மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு

<u>**மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட ம.சா.2ன் மூலம் குறிக்கப்பட்ட சான்றாவணங்கள்:**</u>

**சா.த.சா.ஆ.1** 2018-2019ம் ஆண்டிற்கான ம.சா.2-ன் வருமான வரியின் ரிட்டன் அக்னாலேஜ்மென்ட்

**சா.த.சா.ஆ.2** 02.07.2016ம் தேதியில் ம.சா.2-ன் பெயரில் உள்ள 2 கேஷ் மெமோ மற்றும் இன்வாய்ஸ்

**சா.த.சா.ஆ.3** ம.சா.2-ன் நிறுவனத்தின் பேன் கார்டு விவரங்கள்

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**</u>:

**எ.ம.சா.1** திரு.தீபன் சக்திவேல்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

**எ.ம.சா.ஆ.1** திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தின் ஒளி நகல்

**எ.ம.சா.ஆ.2** 1 வது எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு

**எ.ம.சா.ஆ.3** 2 வது எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு

**எ.ம.சா.ஆ.4** 3 வது எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு

**எ.ம.சா.ஆ.5** 14.05.2019 ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு

**எ.ம.சா.ஆ.6** இமெயிலிலிருந்து 1 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட இமெயில்

**எ.ம.சா.ஆ.7** பாரத் மேட்ரிமோனியலில் கொடுத்த ஆவணங்கள் -2

**எ.ம.சா.ஆ.8** வாட்ச் ஆப்பின் மூலம் மனுதாரரின் தாயார் அறிமுகமான விவரங்கள் (வாட்ஸ்ஆப் எண்.+1 2013547140)

**எ.ம.சா.ஆ.9** 19.10.2015 ம் தேதியன்று மனுதாரர் எதிரிமனுதாரரிடம் வாட்ஸ்ஆப்பில் பேசியதற்கான ஆதாரம்

**எ.ம.சா.ஆ.10** எதிர்மனுதாரரின் அலைபேசியில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் அனுப்பிய செய்திகளின் விபரங்கள்

**எ.ம.சா.ஆ.11** ஐபோன் வாங்கியதற்கான ரசீது

**எ.ம.சா.ஆ.12** Mock engagement புகைப்படங்கள் ஒளி நகல்கள் மற்றும் குறுஞ்செய்தி விபரங்கள்.

**எ.ம.சா.ஆ.13** வாட்ச் வாங்கியதற்கான பில்

**எ.ம.சா.ஆ.14** Mock engagement-ன் போது நகை வாங்கியதற்கான பில்

**எ.ம.சா.ஆ.15** மனுதாரரின் தகப்பனார் அனுப்பிய திருமணத்திற்கான சாப்பாட்டு விபரங்கள்

**எ.ம.சா.ஆ.16** வாட்ஸ்ஆப் மெசேஜ் புகைப்படங்களின் ஒளி நகல்கள்

**எ.ம.சா.ஆ.17** மனுதாரரின் ஆர்க்கிடெக்சர் உரிமம் பெறுவதற்காக செலவு செய்த விபரங்கள்

**எ.ம.சா.ஆ.18** கொச்சினில் துணி வாங்கியதற்கான பில் மற்றும் புகைப்படங்கள்

**எ.ம.சா.ஆ.19** எதிர்மனுதாரருக்கும் மனுதாரரின் தகப்பனாருக்கும் இடையே

உள்ள வாட்ஸ் ஆப் விபரங்கள்

**எ.ம.சா.ஆ.**20 எதிர்மனுதாரரும், மனுதாரரும் 10 நாட்கள் வாழ்ந்தபோது எடுத்த புகைப்படங்கள்

**எ.ம.சா.ஆ.**21 எதிர்மனுதாரர், மனுதாரர் மற்றும் மனுதாரரின் குடும்பத்துடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள்

**எ.ம.சா.ஆ.**22 புகைப்படங்கள் - 18

**எ.ம.சா.ஆ.**23 மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து பயணம் செய்த விமான டிக்கெட் விபரங்கள்

**எ.ம.சா.ஆ.**24 எதிர்மனுதாரர் மனுதாரருக்காக செலவு செய்த கிரடிட் கார்டு, ஓட்டல் பில்கள்

**எ.ம.சா.ஆ.**25 மனுதாரர் எதிர்மனுதாரரின் செலவில் உபேர் டாக்சியில் பயணம் செய்த பில்களின் விபரங்கள்

**எ.ம.சா.ஆ.**26 மனுதாரரின் விசா செல்வதற்கான இண்டர்வியூ பற்றிய விபரங்கள்

**எ.ம.சா.ஆ.**27 மனுதாரர் அவருடைய குடும்பத்தாருடன் எதிர்மனுதாரர் செலவில் பயணம் செய்த ரயில் டிக்கெட் (3)

**எ.ம.சா.ஆ.**28 மனுதாரரின் தொலைபேசிக்கான பில்லிற்கு எதிர்மனுதாரர் செலவு செய்த விபரம் மற்றும் அமேசானில் வாங்கிய பொருட்களுக்கு எதிர்மனுதாரர் செலவு செய்த விபரங்கள்

**எ.ம.சா.ஆ.**29 மனுதாரர் வேலையில் சேர்ந்துவிட்டார் என்று அனுப்பிய ஈமெயில்

**எ.ம.சா.ஆ.**30 மனுதாரர் எதிர்மனுதாரருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் 14.05.2019, 20.05.2019 தேதிகளில் அனுப்பிய அறிவிப்பிற்கான பதில் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டை(4 அட்டைகள்)

**எ.ம.சா.ஆ.**31 மனுதாரர் 13.06.2019 ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு மாவட்ட சமூக நல அலுவலகம் மூலமாக நீதிமன்றத்தின் மூலம் பெறப்பட்ட புகார் மனு எண்.ந.க.எண்.842/2019

**எ.ம.சா.ஆ.**32 எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவு செய்த மொத்த பில்களின்

விபரங்கள்

**எ.ம.சா.ஆ.33** உயர் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் பெற்றோர், சகோதரர் தாக்கல் செய்த Crlop.No.23638/2018-ன் உத்தரவுகள்.

**எ.ம.சா.ஆ.34** 65(b) சான்றிதழ் -2

**எ.ம.சா.ஆ.35** போட்டோக்கள் கடையில் கொடுத்து எடுத்தற்கான ரசீது

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றுபொருட்கள்:</u>**

**சா.பொ.1** மனுதாரர் மது அருந்தும் வீடியோக்கள் அனைத்தும் கொண்ட ஒரு பெண்டிரைவ் -1

**சா.பொ.2** தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்கள் அனைத்தும் கொண்ட செல்போன் -1

ஒம்/- N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
சிறப்பு குடும்ப வன்முறை
தடுப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>நகல்</u>:** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்